**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.114/2021**

**வா.சா. –1– மாரிமுத்து**

**நாள். 20.02.2024**

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பிரதிவாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர் எனது வீட்டில் குடி இருந்தார். இந்த விபரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 12.10.2015ம் தேதியில் ரூ.4,50,000/– பிரதிவாதிக்கு கொடுத்ததாக வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. புரோநோட்டின் பின்பக்கம் எந்த தேதியில் வரவு வைத்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. ரூ.3,50,000/–ஐ பிரதிவாதிக்கு கொடுத்ததாக சொல்லியுள்ளேன், அது எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் 15.06.2016ம் தேதி கொடுத்தேன். ஏற்கனவே வா.சா.ஆ.1 புரோநோட்டின் கீழ் வாங்கிய கடனுக்காக வட்டியோ, யாதொரு தொகையோ செலுத்தாத நிலையில் பிரதிவாதிக்கு மீண்டும் 15.06.2016ம் தேதியில் ரூ.3,50,000/– கடன் எந்த அடிப்படையில் கொடுத்தேன் என்றால் அவர் கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னதன் பேரில் நம்பிக்கையில் கொடுத்தேன். 3ம் புரோநோட்டிற்காக 20.07.2016ம் தேதியில் ரூ.3,50,000/– ஒரு மாத இடைவெளியில் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த 3ம் புரோநோட்டுக்காக பிரதிவாதி அசலோ, வட்டியோ யாதொரு தொகையும் செலுத்தவில்லை என்று சொல்லியுள்ளேன். 4ம் புரோநோட்டிற்காக 07.08.2017ம் தேதியில் ரூ.3,50,000/– கடனாக பிரதிவாதிக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மொத்தம் 4 புரோநோட்டுகளுக்காக ரூ.15 லட்சம் கொடுத்துள்ளேன். மேற்படி தொகையை பிரதிவாதிக்கு கொடுப்பதற்காக, வங்கியிலிருந்து முன்பே எடுத்து வந்து வீட்டில் வைத்திருந்தேன். என்னுடைய நிருபண வாக்குமூலத்திலோ, வழக்குரையிலோ இந்த விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். எனது வங்கி கணக்கில் மேற்படி தொகை இருந்ததை காண்பிக்க ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்திய வருமான வரி சட்டப்படி, ரூ.20 ஆயிரம் அல்லது அதற்கு மேல்பட்ட தொகையை பரிமாற்றம் செய்யப்பட வேண்டும் என்றால் அது வங்கி மூலமாக செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான். மேற்படி ரூ.15 லட்சம் தொகைகளை நான் பிரதிவாதிக்கு கொடுத்ததற்காக எங்களுக்குள் ஒரு குறிப்புணர்வு ஒப்பந்தம் ஏதும் போட்டுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 புரோநோட்டுகளில் உள்ள சாட்சிகள் ஒரே நபர்கள் தான் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ .4 வரையிலான புரோநோட்டு தேதிகளிலோ, மேற்படி ஆவணங்களில் உள்ள சாட்சிகளின் முன்னிலையோ பிரதிவாதி என்னிடம் கடன் ஏதும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான

ஆவணங்கள் என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்குரையில் சொல்லியுள்ளபடி பிரதிவாதி எனக்கு எந்த தொகையும் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி பணம் கொடுக்காததால், யார் மூலமாக பணத்தை திரும்ப கேட்டேன் என்று குறிப்பிட்டு எனது வழக்குரையிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.02.20 18:11:54 +0530

Additional District Judge,

Dindigul.